


# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2016 மார்ச் ~ ஏப்ரல் ~ மே வெளியீடு

சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாயிருக்கும்,
கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ
ஒரு நன்மையுங் குறைவுபடாது.
சங்கீதம் 34:10

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்-கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்-கொள்வதுவுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது. கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்திலுள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com




# புதியவை மட்டும்

**சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான்... ஒரு சத்தத்தைக் கேட்டான்.**
**அப்போஸ்தலர் 9: 3,4**

தர்சு பட்டணத்தானாகிய சவுல் தமஸ்குவிற்கு செல்லும் வழியிலே ஒரு ஒளியைக் கண்டான். ஒரு சத்தத்தையும் கேட்டான். ஆனால் இதன் அடிப்படையிலேயே அவன் உடனடியாகச் சென்று சபையைக் கட்டமுடியாது. ஆனால் அதற்குப் பிறகுதான் அவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யார் என்பதை அதிகமதிகமாக பார்க்க ஆரம்பித்தான். இதற்காக அவன் அரேபியா பாலைவனத்திற்கு செல்ல வேண்டியதாயிருந்தது. (கலாத்தியர் 1:15,17) அங்கே தான் சபை என்பதின் அர்த்தத்தை அதிகமாக புரிந்துகொள்ள ஆரம்பித்தான். அதற்கு பிற்பாடு மற்றவர்களிடம் சபையின் இரகசியத்தைக் குறித்து பேச முடிந்தது. ஏனென்றால், சபையைப்பற்றிய இரகசியம் தேவனிடமிருந்து வெளிப்பாடாக ஒருவருக்குக் கிடைக்க வேண்டும்.

இதே சத்தியத்தை வேதாகமத்தின் கடைசி புத்தகம் நமக்கு அதிகமாக வெளிப்படுத்துகிறது. அங்கே தேவன் தங்கியிருக்கும் வீடாகிய பரிசுத்த நகரம் பரலோகத்திலிருந்து இறங்கி வருவதைப் பார்க்கிறோம். அங்கே இப்பொழுது கட்டப்பட்டு வரும் நகரம் பூர்த்தியடைகிறது. ஆனால், அது வெளிப்படும் நாளுக்கு முன்பாகவே பழையவைகள் எல்லாம் இந்தப் பூமியைவிட்டு நீங்கிப் போய்விடுகின்றன. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். (வெளி 21:5).


அப்பொழுது மாத்திரமே தேவனுடைய வீடும் ஆலயமுமாகிய பரம எருசலேமின் பூரண மகிமையை பார்க்க முடியும். நீ உன்னுடைய பழைய வாழ்க்கையை விட்டுவிடுவதற்கு இடம்கொடு. அவர் உன்னை முழுவதும் புதியவனாக்கட்டும்!




புதியவைகள் மட்டுமே தேவனுடைய வீட்டிலே இடம்பெறும். தேவன் தம்முடைய பரலோகத் திட்டத்தை நமக்கு அதிகமாக வெளிப்படுத்துவாராக! மேலும் அவருடைய பரலோக வீட்டில் எங்கும் எல்லாமும் முற்றிலும் புதியவையாக இருக்கும்.

சகோ. பக்த் சிங்

# அத்திமர நிழலும், காட்டத்தி மரத்தின் உச்சியும்



வாசிக்க வேண்டிய வேத பகுதிகள்:
லூக்கா 19: 01 - 10, யோவான் 01: 45- 50

லூக்கா சுவிசேஷம் 19 ஆம் அதிகாரத்தில் வரி அறவிடுபவர்களின் தலைவனாகவும், செல்வந்தனாகவும் இருந்த சகேயு எனப்பட்ட ஒரு குள்ளமான மனிதன் இயேசு யார் என்று அறிய விரும்பி மிகுந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில் அவரை பார்க்க முடியாமல் இயேசு போகும் வழியில் முன்னாக ஓடிப்போய் ஒரு காட்டத்தி மரத்தின் உச்சியில் ஏறிக்கொண்டான் என்பதாக வாசிக்கிறோம்.

ஆனால், இயேசு அவ்விடத்திற்கு வந்தபொழுது மேலே அண்ணார்ந்து பார்த்து “சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா! இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்க வேண்டுமென அழைத்தார். அவருடைய அழைப்புக்கு கீழ்ப்படிந்த சகேயு உடனடியாகவே கீழிறங்கி அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனான். இயேசுகிறிஸ்துவின் அன்பான அழைப்பிற்கு உடனே கீழ்ப்படிந்த சகேயுவின் வாழ்வில் உண்மையான மனந்திரும்புதல் உண்டானது மட்டுமல்ல அவனுடைய வீடும் ஆசீர்வதிக்கப்படுவதை அடுத்து வரும் வசனங்களில் வாசிக்கிறோம்.

இன்றும் கூட அநேகர் சகேயுவைப் போலவே தங்களது சுய நீதியாகிய காட்டத்தி மரத்தின் உச்சியிலும் மத வைராக்கியமாகிய காட்டத்தி மரத்தின் உச்சியிலும் இருந்து கொண்டு இயேசுவை காண முற்படுகின்றனர்.

அப்படிப்பட்டவர்களைப் பார்த்து இயேசு அழைக்கிறார்: “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” மத்தேயு 11:28.

இயேசுவின் இந்த அழைப்புக்கு எவன் உடனடியாகக் கீழ்ப்படிந்து தமது சுயநீதி, மத வைராக்கியம் ஆகிய காட்டத்தி மரத்திலிருந்து, சகேயுவைப் போன்று இறங்கி வருகின்றானோ அவனுடைய வாழ்வில் மெய்யான சந்தோஷத்தையும், இரட்சிப்பின் நிச்சயத்தையும் பெற்று உண்மையான மனந்திரும்புதலை அடைய முடியும்.

யோவான் முதலாம் அதிகாரத்தில் இயேசுவைத் தேடி வந்த இன்னொரு மனிதனைப்பற்றி வாசிக்கிறோம். அந்த மனிதனுடைய பெயர் நாத்தான்வேல் (Nathana-el) - பர்த்தொலொமேயு என்றும் அறியப்படுகிறார். இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். எவ்வளவு அற்புதமான நற்சாட்சி பாருங்கள்.

அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்.

அந்நாட்களிலே கடவுளுக்கு உண்மையாய் வாழ்ந்த இஸ்ரவேலர்கள் கர்த்தருடைய வேதத்தைத் தியானிப்பதற்கு தெரிவு செய்த இடம் அத்திமரத்தின் நிழலாகும். யூத மக்களுடைய

வாழ்க்கையிலே மூன்று மரங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அத்திமரம் அவர்களுடைய இராஜரீக சிலாக்கியத்திற்கு அடையாளமாகவும், திராட்சை அவர்களது மத (ஆன்மீக) சிலாக்கியத்திற்கு அடையாளமாகவும், ஒலிவமரம் அவர்களது ஆவிக்குரிய சிலாக்கியத்திற்கு அடையாளமாகவும் கருதப்பட்டது.

ஆகவே, அவர்கள் எதிர்ப்பார்த்திருந்த இராஜாவாகிய மேசியாவைக் குறித்து நியாயப்பிரமாணங்களிரும், தீர்க்கதரிசன ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் மேசியாவைப் பற்றி எழுதியிருப்பவைகளை அத்திமரத்தின் நிழலில் அமரந்திருந்து தியானிப்பதும், மேசியாவின் வருகைக்காக காத்திருப்பதும் ஒரு உண்மையுள்ள யூதனின் வழக்கமாயிருந்தது. இதனால் தான் இயேசுவானவர் நாத்தான்வேலிடம் நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்.

ஆண்டவருடைய வாயிலிருந்து கபடற்ற உத்தமன் என நற்சாட்சிப் பெற்றதை எவ்வளவு பெரிய பாக்கியமாய் கருத்திற் கொள்ள வேண்டும். இன்று அவரின் இரண்டாம் வருகைக்காக காத்திருக்கும் எம்மைக் குறித்தும் அவருடைய சாட்சி இவ்வண்ணமாய் இருக்குமேயானால், எவ்வளவு நலமாக இருக்கும். ஆம்! அவர் உத்தம குணத்தில் பிரியப்படுகின்ற தேவன். 1 நாளாகமம் 29:17: என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்.

அன்று தாவீது அரசன் தனக்குப்பின் இஸ்ரவேலை ஆட்சி செய்ய இருந்த தனது மகன் சாலொமோனுக்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பிக்கும் போது "என் குமாரனாகிய சாலொமோன் உம்முடைய கற்பனைகளையும் உமது சாட்சிகளையும் உம்முடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கும், அவனுக்கு உத்தம இருதயத்தைத் தந்தருளும்" என்றான். 1 நாளா 29:19. ஆனால் கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று சொன்னபொழுது சாலொமோன் கர்த்தரிடத்தில் உத்தம இருதயத்திற்கு பதிலாக ஜனங்களை நியாயம் விசாரிக்க ஞானமுள்ள இருதயத்தை கேட்டுப் பெற்றுக் கொண்டான். (1இராஜா 03:5-9)




அதனால் தானோ என்னவோ சாலொமோன் தன் இறுதி நாட்களில் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய் நடக்க தவறிவிட்டான். தேவன் அவனுக்கு அருளின ஞானத்தினாலே அநேகருக்கு உபதேசித்தான். 3000 நீதிமொழிகளைச் சொன்னான். 1005 பாடல்களை இயற்றினான். (1 இராஜா 4:32)

ஆனால், தன் சொந்த வாழ்விலோ கர்த்தருக்கு உண்மையாய், உத்தமமாய் வாழ்வதிலிருந்து விழுந்து போய் விட்டான் (1 இராஜா 11:01-04).

அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல்

1 கொரிந்தியர் 9:27ல் மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருந்த நாட்களிலே தன் மனைவியாகிய சாராளின் ஆலோசனைக்கு செவிகொடுத்து விசுவாசத்தில் தடுமாறிய சந்தர்ப்பத்தில் கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி சொன்ன வார்த்தை நான் சர்வ வல்லமையுள்ள தேவன். நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. (ஆதியா 17:1)

ஆம்! தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது (2நாளா 16:9)

காட்டத்தி மரத்தின் உச்சியில் இருந்து இயேசுவை பார்க்க விரும்பின சகேயுவையும் அவர் முன்னறிந்திருந்தார். அத்திமரத்தின் கீழிருந்து மேசியாவின் வருகையை தியானித்த நாத்தான்வேலையும் அவர் முன்னதாக அறிந்திருந்தார். காட்டத்தி மர உச்சியில் இருந்தவனைப் பார்த்து சீக்கிரமாய் இறங்கி வா என அழைத்தார். அத்தி மர நிழலில் அமர்ந்திருந்தவனைப்பார்த்து இதோ! கபடற்ற உத்தமன் என நற்சாட்சி கொடுத்தார்.

நாம் இன்று எந்த நிலைமையில் இருந்து அவரை அறிய விரும்புகிறோம். அத்தி மர நிழலா? காட்டத்தி மர உச்சியிலா? உடனடியாய் இறங்கி வரவேண்டிய நிலையா? இதோ! கபடற்ற உத்தமன் என்ற நற்சாட்சி பெறும் நிலையா? சிந்தித்து செயல் ஆற்றுவோம். உத்தமனுக்கு கர்த்தர் துணை. (2 நாளாகமம் 19: 11)

- Bro. A. Gnanendran -

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### ஆதியாகமம்

| | | |
|---|---|---|
| எழுதியவர் | : | மோசே |
| காலம் | : | கி.மு. 1450-1410 |
| அதிகாரங்கள் | : | 50 |
| வசனங்கள் | : | 1533 |
| அடக்கம் | : | 2286 வருட வரலாறு |

**பின்வருவனவற்றின் ஆரம்பம் எழுதப்பட்டுள்ளது:**

அகிலம், வாழ்வு, மனிதன்,
ஓய்வு நாள், விவாகம், பாவம்,
மரணம், குடும்பம், மீட்பு,
தீர்க்கதரிசனம், பாஷை, பலி

**மேசியாவைப்பற்றிய எதிர்வுகூறல்:**

ஆதி 3:15 - ஸ்திரீயின் வித்து
ஆதி 4:25 - சேத்தின் வம்சம்
ஆதி 9:27 - சேமின் வம்சம்
ஆதி 12:3 - ஆபிரகாமின் வம்சம்
ஆதி 21:12 - ஈசாக்கின் வம்சம்
ஆதி 25:23 - யாக்கோபின் வம்சம்
ஆதி 49:10 - யூதா கோத்திரம்

# உன்னத தேவனின் உன்னத தெரிந்துகொள்ளுதல்



அகில அண்டசராசரத்தையும் படைத்து அதனை தம் கட்டுப்பாட்டில் வைத்து, ஆண்டு நடத்துகிறவரும், உண்மையும், பரிசுத்தமும், நீதியும், சர்வ ஞானமும், மட்டற்ற வல்லமையும் உடைய உன்னத தேவன் தாம் சிருஷ்டித்த மனுக்குலத்தில் தமது நாமத்தின் மகிமைக்காக சிலரை தெரிந்துகொள்கிறார் - சிலரை தள்ளி விடுகிறார். இதனை என்னாலும், உங்களாலும் புரிந்து கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் கடினமாக இருந்தாலும், அவர் இச்செயல்பாட்டை செய்கிறவராகவே இருக்கிறார்.

தேவனுடைய இந்தத்தெரிந்து கொள்ளுதலானது மூன்று அடிப்படை கோட்பாடுகளைக் கொண்டதாகும்.

### 1. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின் அடிப்படை:

ரோமர் 8: 29 - தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்

எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

தேவன் ஒருவரை தெரிந்து கொள்ளும்போது, (உதாரணமாக இப்புத்தகத்தை வாசிக்கும் நீங்கள்) ஒருவர் தேவனுடைய சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிப்பார் என்றோ, அல்லது நல்லதையே செய்பவர் என்றோ தெரிந்துகொள்வதில்லை. ரோமர் 9:11 (பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு) மாறாக ,அவர் தமது தீர்மானத்தின்படியும், அவரது இரக்கத்தின்படியும் தெரிந்து கொள்கிறார்.

### 2. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின் காரணம்:

தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின் உறுதிப்பாடு என்பது தேவன் ஒவ்வொரு மனிதனையும் தனித்தனியாகவும் தமது இரட்சிப்பின் இலக்கத்திட்டத்திற்கு உட்பட்டதுமாய் இருக்கிறது. அது ஒருபோதும் கூடவோ, குறையவோ செய்யாது. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலானது அவ்வப்போது நடைபெறுவதில்லை. அது உலகத்தோற்றம் முன்பே தேவனுடைய

முன் தீர்மானத்தின்படியே நடைபெற்றது. தேவன் தமது மக்கள் மீது தனிப்பட்ட தமதன்பின் அடிப்படையில் தெரிந்துகொள்கிறார். எபேசியர் 1:12- தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்.

எனவே, சகோதர, சகோதரிகளே! நீங்கள் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் என்று நாங்கள் அறிந்து எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம் பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். 1 தெசலோனிக்கேயர் 1:3,4



இதனை வாசிக்கும் சகோதர, சகோதரிதரிகளே! இவ்வுலகத்தில் இத்தனை கோடி மக்கள் வாழும் போது, சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களை கிறிஸ்து இயேசுவுக்குள் தெரிந்துகொண்டதை விசுவாசிக்கிறீர்களா? எபேசியர் 1:4 - தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார். அவர் தெரிந்துகொண்ட பிரகாரம் வாழ்கிறீர்களா?

மாற்கு 3:13-14- தேவனோடு நேரம் செலவிடுகிறீர்களா? தேவனுடைய நற்செய்தியை அறிவிப்பது எங்களின் ஆவலாய் அமைந்துள்ளதா? தேவனின் சபைக்கு உங்களால் நன்மைகள் உண்டா? இவைகளில் நாம் தவறியிருப்போமாகில் இன்றே எம்மை திருத்திக் கொள்ள தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு சேருவோம். எபிரெயர் 4:16 நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் இழப்பு நமக்குத்தான்.

யோசுவா 18:3 - ஆகையால் யோசுவா இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப்போகிறதற்கு, நீங்கள் எந்தமட்டும் அசதியாயிருப்பீர்கள்.

எஸ்தர் 4:14- நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்.

2 பேதுரு 1:3-10 தயவு செய்து உங்கள் வேதாகமத்தைத் திறந்து இவ்வேத வசனங்களை வாசித்து தியானிக்கவும். எபேசியர் 5:16- ஆண்டவர்

இயேசுவின் வருகை மிக சமீபம். காலம் தாழ்த்தாது. நேரத்தை வீணடிக்காது. கர்த்தராகிய தேவன் என்னை தெரிந்துகொண்டுள்ளார் என்ற வைராக்கிய வாஞ்சையோடு எழும்புவோம். தேவனுக்காக செயல்படுவோம்.

ஏசாயா 60:1-3 இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும் ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார் அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.




உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள். ஏசாயா 52:1.2 / நியாயா 1:1-4, 6,14 /நெகேமியா 2:17,18

நிச்சயமாக பரிசுத்தாவியானவராகிய தேவன் இக்கட்டுரை மூலமாக உங்களோடே திடமாக பேசுவார் என்ற விசுவாசமும் திட நம்பிக்கையும் எனக்குஉண்டு. நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள இராஜனுமாய் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாய் இருக்கிறவருக்கு கனமும், மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக! ஆமென்

- Bro. Xavier -

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

முப. 8.15 - ஞாயிறு பாடசாலை
முப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!





# விசுவாசித்தவளே பாக்கியவதி

- Sis. Tilaka -

வேதத்தில் யோசுவா புத்தகத்தில் 2 ஆம், 6 ஆம் அதிகாரங்களிலே எரிகோ பட்டணத்தில் வாழ்ந்த ராகாப் என்ற ஒரு பெண்ணைப் பற்றி நாம் பார்க்கிறோம். இவள் தேவனுடைய இரண்டு மனிதர்களை தன்னுடைய சுய ஜனங்களிடமிருந்து பாதுகாத்தாள்.

**1. அவள் தேவனை அறிந்திருந்த பெண்ணாக இருந்தாள்:**

அவள் முன்பதாகவே ஜீவனுள்ள தேவனைக் குறித்தும், அவருடைய வல்லமையைப்பற்றியும் நன்றாக அறிந்து வைத்திருந்தாள். தேவனின் ஜனங்களாகிய இஸ்வேலரையும் அறிந்திருந்தாள். இதோ அவள்: யோசுவா 2:9-13: கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன்.

நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட போது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்தசமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப் போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம்.

கேள்விப்பட்ட போது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று. உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்

**2. அவள் புத்தியுள்ள பெண்ணாக இருந்தாள்:**


அதனால் தான் அவள் தன்னையும், தன் குடும்பத்தாரையும் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டை அவர்களிடம் பெற்றுக்கொள்கிறாள் (வச12-14) இப்போதும் நான் உங்களுக்குத் தயவுசெய்தபடியினால், நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்குத் தயவு செய்வோம் என்று கர்த்தர் பேரில் எனக்கு ஆணையிட்டு, நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும் என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத்தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்கவேண்டும் என்றாள்.

அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி: எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு. நீங்கள் எங்கள் காரியத்தை வெளிப்படுத்தாதிருந்தால், கர்த்தர் எங்களுக்குத்தேசத்தைக் கொடுக்கும் போது, நாங்கள் தயையும் சத்தியமும் பாராட்டுவோம் என்றார்கள்.

**3. விசுவாசித்ததினால் பலனை அனுபவித்த பெண்:**

யோசுவா புத்தகத்தில் அவள் ஏற்கனவே தேவனைப் பற்றி கேள்விப்பட்டிருந்தாள் என்று பார்த்தோம். அதை

விட அவள் தேவனை விசுவாசித்தாள் என்று புதிய ஏற்பாட்டில் பார்க்கிறோம். விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள். எபிரெயர் 11:31



**4. விசுவாசித்ததின் விளைவாக நற்கிரியையில் நீதியுள்ளவளானாள்:**

ஏனெனில், நற்கிரியைகளைச்செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:10. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்ட போது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள் யாக் 2:25.

**5. புதுவாழ்வை பெற்றுக்கொண்டவள்:**

அவளுடைய பழைய வாழ்க்கை எப்படிப்பட்டதாயிருந்தாலும் அவள் இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே ஒருத்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இஸ்ரவேலனான சல்மோன் என்பவனால் அவள் மறுவாழ்வான புதுவாழ்வை பெற்றுக்கொண்டாள். மத்தேயு 1:5

**ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.**
**2 கொரிந்தியர் 5: 17**

ராகாப்பை போலவே நாம் தேவனை விசுவாசித்து, அவருடைய வல்லமைகளை மதித்து, பயத்துடன் அவரைத் தொழுதுகொள்கிறோமா? அப்படியென்றால் தேவனும் எமது பாவங்கள் யாவையும் நினையாமல் நாம் ஒருபோதுமே பாவம் செய்யாதவர்களைப் போன்று, ஆண்டவரின் இரட்சிப்பையும், நீதிதன்மையையும் பாதுகாப்பையும் நமக்கு அருளுவார்.

நாம் தேவனுடைய பிள்ளைகளை பாதுகாக்கிறவர்களாக இருக்கிறோமா? பாதுகாப்போமானால் பலன் உண்டு. உனது இரட்சிப்பை, கிறிஸ்தவ வாழ்வின் மேன்மையைக் குறித்து அறிவீரா? உன் குடும்பத்தின், உன் உறவினரின் இரட்சிப்பைக் குறித்தும் கரிசனையுடையவராய் இருக்கிறீரா? தேவனிடம் கெஞ்சி ஜெபிக்கிறீரா? மன்றாடுகிறாயா? நமது கர்த்தருடைய ஆவியானவர் உன்னோடு பேசுவாராக!



# பெற்றோரின் பெரும் தவறுகள்

## முன்மாதிரியாயிருங்கள்

– சகோ. சந்திரன் –



இன்று அநேக குடும்பங்களில் பிள்ளைகள் தவறிப் போக காரணம் என்ன? நாம் பல காரணங்களை சொல்லலாம். என்ன செய்வது, என் சமூகச்சூழல் அப்படி, சேரும் நண்பர்கள் அப்படி, என்று பல காரணங்களை சொல்லலாம்.

ஆனால் வேதம் கூறும் உண்மை என்ன? உதாரணம் பெற்றோரின் சுபாவத்தை பிள்ளைகள் பெற்றுக்கொள்கிறார்கள் என்று

**1. ஈசாக்கு**

ஆதியாகமம் 26:6,7ல் தன் மனைவியை சகோதரி என்று பொய் சொல்கிறான். இது எப்படி வந்தது?

ஆதி 12:13, 20:2ல், ஆபிரகாம் செய்த தவறை அவன் மகன் ஈசாக்கு செய்கிறான். இதை ஈசாக்கு பார்த்தானா கேட்டானா? இல்லை.

தேவபிள்ளைகளே! நீங்கள் எதை செய்வீர்களோ அதே பிழையை உங்கள் பிள்ளைகளும் செய்வார்கள். கவனம்.

சில நேரங்களில் நாம் நினைப்பது உண்டு நான் இவர்களுக்கு முன்னால் எதையும் பேசுவது கிடையாதே என்று (மறைத்து செய்வது) இதை மரியாதை என்று கூட சொல்லலாம். உள்ளே ஒன்று வெளியே ஒன்று. தேவனுடைய பிள்ளையே! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எப்படி வாழ்வீர்களோ அப்படியே உங்கள் பிள்ளைகளும் இருப்பார்கள்.

**2. சேஷ்டபுத்திரபாகம் இழந்த ஏசா**

உபா 21:16,17. இது பிறப்பால் கிடைத்த பாக்கியம். மூத்த மகனுக்குரிய சிலாக்கியம். இரட்டிப்பான தன்மை. இதை எப்படி ஏசா இழந்தான் தெரியுமா?

ஆதியாகமம் 25: 29 - 34 ஒரு வேளை உணவுக்காக (போஜனப்பிரியன்) தன் ஆசீர்வாதத்தை இழந்து போனான்.

இது எங்கே இருந்து வந்தது என்று கேட்கிறீர்களா? வேறு எங்கேயும் இல்லை. தன் தகப்பனாகிய ஈசாக்கிடமிருந்தே பெற்றுக்கொண்டான். ஆதி 27:3,4, 25:28 (வாய்க்கு ருசி) பிரியமானவர்களே நம் குணத்தைப்போலவே நம் பிள்ளைகளுக்கும் வரும் என்பதை ஒருபோதும் மறந்து போகாதே. நாம் இன்று பீடி சிகரட் குடிக்கிறோம். மதுபானம் அருந்துகிறோம். வெற்றிலை போடுகிறோம். கெட்ட கெட்ட வார்த்தைகளை பேசுகிறோம். நாம் இதையெல்லாம் செய்து விட்டு, (செய்து கொண்டு) பிள்ளைகளை பார்த்து இதைச்செய்யாதே அதைச்செய்யாதே என்று சொல்வதை விட்டுவிட்டு, நமக்கு முன்மாதிரியாக எல்லாவற்றிலும் வாழ்ந்து காட்டிய நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்போல் வாழ்ந்து காட்டுவோமா?

# என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவன்

நான் ஒரு ரோமன் கத்தோலிக்க குடும்பத்தை சேர்ந்தவள். நான் வாழ்ந்த சமுதாயம், கல்வி கற்ற பாடசாலை எல்லாமே ரோமன் கத்தோலிக்க பின்னணியை சேர்ந்ததாக இருந்த-படியால் அந்த மதத்தில் மிகுந்த பக்திவைராக்கியம் கொண்டவளாக இருந்தேன்.

எனக்கு ஒரு பத்து வயது இருக்கும் போது அங்லிக்கன் சபையை சேர்ந்த ஒரு சகோதரியின் அறிமுகம் கிடைத்-தது. அந்த சகோதரியின் வீட்டில் தான் முதல் தடவையாக பரிசுத்த வேதாகமத்தை வாசித்தேன். அந்த சகோதரி எனக்கு கத்தோலிக்க மதத்திற்கும் வேதாகமத்திற்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகளை காண்பித்தார். நான் முதல் தடவையாக மத்தேயு சுவிசேஷத்தை ஒரு சில மணித்தியாலங்களில் மிகவும் ஆசை-யோடு வாசித்தேன். அதில் இயேசுவின் பாடுகள், அவருடைய சிலுவை மரணம் என் மனதை மிகவும் கலங்கச்-செய்தது. அன்றிலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மிகவும் நேசிக்க ஆரம்பித்தேன்.

ஆனால் இரட்சிப்பு என்றால் எனக்கு என்ன என்று தெரியாது. அப்போது தான் எனது வீட்டின் அருகில் ஒரு சுவிசேஷக்கூட்டம் நடைபெற்றது. அந்த சகோதரியோடு அக்கூட்டத்திற்கு சென்றேன். அங்கு பாடிய பாடல்கள் அம்மக்களின் அன்பு என்னை மிகவும் கவர்ந்தது. தொடர்ந்தும் நான் அக்கூட்டங்களுக்கு சென்றேன். இயேசு கிறிஸ்துவை எனது சொந்த இரட்ச-கராக ஏற்றுக்கொண்டேன். அவருக்கு சாட்சியாக வாழ வேண்டும் என்றும் அவரைப்பற்றி அறியாதவர்களுக்கு அவரைப்பற்றி கூற வேண்டும் என்று தீர்மானம் எடுத்தேன்.

என்னுடைய உறவினர்கள் நண்பர்கள் யாவரும் என்னை வெறுக்க ஆரம்பித்தார்கள். பாடசாலையில் என்னை அடித்தார்கள். கல்வி பொதுத் தராதரப்பரீட்சை எழுத எனக்கு அனுமதி கொடுக்கவில்லை. அவை எல்லாவற்-றிலும் எனக்கு பயமோ, சோர்வோ ஏற்படவில்லை. இன்னும் அதிகமாக அவரைப்பற்றி சாட்சி கூறினேன். பன்னிரண்டு நாட்களில் வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடித்தேன்.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்ற விசுவாசத்தோடு, என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கி-றவருமான தேவன் என்னை மரண பரியந்தம் வழிநடத்துவார். ஏனெனில், அவரே விசுவாசத்தை தொடக்கு-கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவருக்கே துதியும் கனமும் மகிமை-யும் உண்டாவதாக. ஆமென்.

- Sis. Grace -



# துக்கத்தினால் தூக்கம்

அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணுகிறதைக் கண்டு... லூக்கா 22:45

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கெத்செமனே தோட்டத்தில் வியாகுலத்துடன் ஜெபிக்கும் போது அவருடைய சீஷர்கள் நித்திரைப் பண்ணிக்கொண்டிருந்தார்கள் என்பது நாம் நன்கு அறிந்த விடயமாகும். நாம் ஜெப வீரர்கள் போலும் அச்சீடர்கள் பெலவீனர் போலும் எண்ணி நம்மில் எத்தனையோ பேர் அந்த சீஷர்களைக் குற்றப்படுத்தி கரித்துக்கொட்டியிருப்போம். அவர்கள் செய்தது சரி என்று நிரூபிப்பது அல்ல இக்கட்டுரையின் நோக்கம். ஆயினும் அவர்கள் தரப்பு நியாயங்களையும் சற்று ஆராய்வோம்.

கெத்செமனே தோட்ட ஜெபம் கிறிஸ்தவர்கள் எவருக்கும் மிக முக்கியமான, மறக்க முடியாத, யாவரும் அறிந்த சம்பவமாகும். நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் இந்த சம்பவம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் லூக்கா எழுதும் போது, சீஷர்கள் நித்திரைபண்ணியதற்கான காரணத்தையும் எழுதுகிறார். “அவர் ஜெபம் பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணுகிறதைக் கண்டு....” (லூக்கா 22:45)

இது நமக்கு சீஷர்கள் களைப்பினாலோ சோம்பலினாலோ அல்ல தூங்கினார்கள் எனவும் அவர்கள் தூங்கியதற்கு காரணம் அவர்களது துக்கமே எனவும் தெளிவுபடுத்துகிறது.

துக்கத்தினால் அவர்கள் தூங்கியது சரியா பிழையா என விவாதிக்க முன்னர் அவர்களது துக்கத்துக்கான காரணத்தை அறிவோம்.


யோவான் 12ம் அதிகாரம் 1ம் வசனத்தில் பஸ்கா பண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்த போது மரியாள் நளதம் என்னும் தைலத்தை இயேசுவின் பாதத்தில் பூசிய போது இயேசு சொன்ன வார்த்தை மனதை உறையவைக்கக்கூடியது. “என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்”.

யோசித்துப்பாருங்கள், மரணத்துக்கு என்று வாங்கியதை மரணத்துக்கு முன்னே கொடுப்பது அவருக்கு அண்மையிலேயே இருந்த அன்பானவர்களுக்கு எவ்வளவு வேதனையானது! அது மாத்திரமல்லாது இயேசு தொடர்ந்து கூறிய வார்த்தைகள் “நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்”

மறுநாளிலே இயேசு எருசலேமுக்குள் நுழையும் போது குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவரை ராஜாவைப்போல கொண்டாடினார்கள். 16ம் வசனம் சொல்கிறது சீஷர்கள் இப்படிச்செய்ததின் அர்த்தத்தை அறியவில்லையென்று. அவர் ராஜாவாகப்போகிறார் என்று அவர்கள் அந்த அளவுக்கு எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் 23ம் வசனத்திலிருந்து இயேசு மறுபடியும் தம் மரணத்தைப்பற்றிக் கூறுகிறார். 27ம் வசனத்தில் இயேசு: “இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது” என்றார். இதற்கு முன் சீஷர்கள் இப்படி ஒரு வார்த்தையை இயேசுவிடம் இருந்து கேட்டிருக்க மாட்டார்கள்.

பஸ்கா பண்டிகைக்கு முன்னே,

கடைசி இராப்போசனத்தின் போது யோவான் 13ம் அதிகாரத்தில் இயேசு தன் கால்களை கழுவக்கூடாது என்று கூறும் அளவுக்கு பேதுரு அவர் மீது கனம் வைத்திருந்தான். அவரை அவன் ஆண்டவராகவே பார்த்தான். அவரிடத்தில் தனக்கு முழுமையான பங்கு கிடைக்க வேண்டும் என எண்ணினான்.



இயேசு ஆவியிலே மறுபடியும் கலங்கி உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என சொன்ன போது அது யாரோ என அறியும் ஆர்வத்தில் அது யார் என கேட்கும் படி யோவானுக்கு சைகை காட்டினான் பேதுரு.

யோவான் 13:33ல் பிள்ளைகளே! என இயேசு தம் சீஷர்களை அழைக்கிறார். இதற்கு முன் அவர் தம் சீஷர்களை பிள்ளைகளே என அழைத்ததாக எங்கும் காணப்படவில்லை. இங்கே பிள்ளைகளே என அவர் அழைப்பதாலே அவர்கள் மீது அவர் கொண்ட அன்பும் அவர்கள் மனதுக்கு தேவையான ஆறுதலும் காண்பிக்கப்படுகிறது.

அவ்வேளையில் சீஷர்கள் கலங்கிப்போயிருந்தார்கள். ஏறத்தாழ 3 வருடங்களாக ஒன்றாக கூடவே இருந்து நன்மை தீமை எல்லாவற்றிலும் பங்கேற்று கஷ்ட நஷ்டங்கள் எல்லாவற்றிலும் நம்பிக்கையூட்டி தங்களை நடத்தியவர் மரிக்கப்போகிறார் என்ற துயரமும் அதன் பின் என்ன நடக்குமோ என்ற ஐயமும் பயமும் சீஷர்கள் மனதில் குடிகொள்ள அவர்கள் இருதயம் கலங்க ஆரம்பித்தது. எனவே, தம் சீஷர்களின் மனதை நன்கு அறிந்த நம் ஆண்டவர் 14ம் அதிகாரத்தில் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்றுக்கூறி என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் எனக்கூறினார்.

யோவான் 14:28 படி, இயேசு பிதாவினிடத்திற்கு போகிறதைக் குறித்து சீஷர்கள் சந்தோஷப்படாததினாலே சீஷர்களின் பயம் அவர்கள் இயேசுவின் மீது கொண்டிருந்த அன்பைக் குறைந்து போகச்செய்தது என்று தெரிகிறது. ஆனாலும் இயேசு தமது கிருபையுள்ள வார்த்தைகளாலே அவர்களைத் தொடர்ந்தும் திடப்படுத்திக் கொண்டே இருந்தார்.

மனுஷருக்குள்ளிருப்பதை அவர் நன்கு அறிந்திருந்தபடியால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது என்றார் (யோவான் 16: 6). அன்பானவர்களே! உங்கள் இருதயமும் அதின் துக்கமும் அவருக்கு நன்கு தெரியும்.

நீங்களும் இப்பொழுது துக்கம் அடைந்திருக்கிறீர்கள் என யோவான் 16:22ல் இயேசு கூறியதைக்கேட்ட சீஷர்கள் 30ம் வசனத்தில் நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என சொல்வதில் இருந்து சீஷர்கள் தாங்கள் துக்கமாயிருந்ததை ஒத்துக்கொண்டார்கள் என்று விளங்குகிறது

யோவான் 17ம் அதிகாரத்தில் இயேசு செய்த ஜெபம் சீஷர்களின் மனதை உளுக்கியது. சீஷர்களைக் குறிப்பிட்ட ஒவ்வொரு முறையும் அவர்களை "என்னுடையவர்கள்" என்றே குறிப்பிட்டார். இவைகளைச் சொன்ன பின்பே, இயேசு சீஷர்களுடன்

கெத்செமனே தோட்டத்துக்கு போகிறார் (யோவான் 18:1)

இப்பொழுது சீஷர்களின் மன நிலை புரிகிறதா அருமையானவர்களே?

பல காலமாகவே இயேசு தமது மரணத்தைப் பற்றி சீடர்களுக்கு சொல்லிக்கொண்டு வந்த போதிலும் அது நடக்க நாள் செல்லும் என அலட்சியமாய் இருந்த சீடர்கள் இயேசுவின் கடைசி வாரத்தில் நடைபெற்ற சம்பவங்களாலும் இனி என்ன நடக்கப்போகிறது என இயேசு கூறிய வார்த்தைகளாலும் கலங்கினவர்களாகவும் உள்ளத்தில் துக்கம் மேலிட்டவர்களாகவும் இருந்தார்கள்.

இயேசு தம்மை விட்டு பிரியப்போகிறார் என சீஷர்களுக்கு இருந்த கவலை, ஏக்கம் ஒருபுறம் இருக்க இயேசு மரித்த பின் தங்களுக்கு என்ன நடக்குமோ என்ற அச்சமும் மேலிட, நடக்கும் சம்பவங்கள் யாவும் பாதகமாய் அமைய சீஷர்களால் தங்கள் துக்கத்தை தாங்க முடியவில்லை. துக்கத்தின் உச்சத்தைத் தொட்டவர்களாக சீஷர்கள் சோர்ந்து போனார்கள். அப்படி சோர்ந்து போன நேரத்தில் அவர்கள் தங்களை ஆவியில் திடப்படுத்திக் கொண்டு தங்களுக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்குள் கடந்து போவதற்கு தேவையான சக்திக்காக தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டியதாகவே இருந்தது. ஆனால் இயேசு ஜெபித்தார். தாம் அந்த வேளைக்குள் போவது தான் தேவ சித்தம் என்றால் அது அப்படியே ஆகட்டும் என்று ஜெபித்தது போல சீஷர்கள் செய்யவில்லை. அவர்கள் தங்களுடைய தற்போதைய நிலையை மாத்திரமே யோசித்தார்களே தவிர தான் உயிர்த்தெழுவேன் என இயேசு சொன்ன எதிர்கால நன்மையை சீஷர்கள் கருத்தில் கொள்ளவில்லை.

இயேசு அவர்களுக்கு கொடுத்த திடப்படுத்தும் வார்த்தைகளையும் தம் உயிர்த்தெழுதலைப்பற்றியும் தம் மறுவருகையைப்பற்றியும் அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களையும் தேவனின் தெய்வீக திட்டத்தையும் மறந்து போனவர்களாய் தூங்கினார்கள்.

விளைவு என்ன? சீஷர்கள் யாவரும் இயேசுவைத் தனியே விட்டு சிதறி ஓடினார்கள். இயேசுவைத் தெரியவே தெரியாது என பேதுரு சபித்து சத்தியம் பண்ணினான். சீஷர்கள் தோற்றுப்போனார்கள். நடப்பது நடக்கட்டும் நம்மால் என்ன செய்ய முடியும், தூங்கினால் சற்று நேரத்துக்காவது பிரச்சனைகளை மறந்து விட்டு இருக்கலாமே என எண்ணி தங்களையே ஏமாற்றிக்கொண்டு தூங்கினார்கள். எனவே தான் இயேசு லூக்கா 22:46ல் நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று சொன்னார்.

இன்று பிரச்சனைகள் தலைக்கு மேலாய் வரும் போர்து, தாங்க முடியா துயர் ஏற்படும் போது, நிலைமை எல்லை மீறி போகும் போது, சூழ்நிலை கட்டுப்பாட்டை இழக்கும் போது நீ என்ன செய்கிறாய்? யாவற்றையும் மறந்து, இது தான் தீர்வு என நீ நினைத்துக் கொண்டிருக்கும் உன் எண்ணங்களாலும் தற்காலிக தீர்வுகளாலும் உன்னையே ஏமாற்றிக்கொண்டு தூங்குகிறாயா? அல்லவென்றால் விழித்திருந்து ஜெபிக்கிறாயா?

*இயேசு:*
உலகத்தில் உங்களுக்கு
உபத்திரவம் உண்டு,
ஆனாலும் திடன்கொள்ளுங்கள்.
நான் உலகத்தை ஜெயித்தேன்.
யோவான் 16:33

- Bro. Varaprasath -



# உறுவாட்டம் முதல் உருமாற்றம் வரை



மாற்கு 5: 1 - 20

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**அறிமுகம்**

இவ்வேதபகுதியானது பிசாசு பிடித்து பெரும் வேதனை வாட்டத்தோடு இருந்த ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்து குணமடைந்து தன் வாழ்வில் மாற்றத்தை அனுபவித்த கதையாகும். வாழ்வில் உண்மையான மாற்றம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்திப்பதால் மட்டுமே கிடைக்கும். வேறெதினாலும் வாழ்க்கையில் மாற்றத்தைக்கொண்டுவர முடியாது.

2 கொரிந்தியர் 5:17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

உங்களுக்கு வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டும் என்றால், நீங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சந்திக்க வேண்டும். இம்மனிதன் குணமடைவதற்கு முன் இருந்த நிலைமையைப் பற்றிய விபரமானது, பாவத்தில் இருப்பவர்களுடைய நிலைமையை ஆவிக்குரிய கருத்தில் வெகுவாக ஒத்திருக்கிறது. அதேபோல, அவன் குணமடைந்ததற்கு பின்பதான விபரமும் ஒரு விசுவாசியில் காணப்பட வேண்டிய குணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

### வேதனைப்படுத்தப்பட்ட மனிதன்

1. **கல்லறை வாசி** - வசனம் 3
2. **சங்கிலி உடைப்பவன்** - வசனம் 3,4
3. **மலை சஞ்சாரி** - வசனம் 5
4. **தன்னைத்தானே அழித்துக்கொள்பவன்** - வசனம் 5
5. **மதரீதியாக கதைப்பவன்** - வசனம் 7

### மாற்றப்பட்ட மனிதன் - வசனம் 15 - 20

1. **ஐக்கியம்** - இந்த மனிதன் குணப்பட்ட பின்பு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடும் அவரது சீஷரோடும் காணப்பட்டான் வசனம் 15. இது, இரட்சிக்கப்பட்ட ஒருவன் கொள்ள வேண்டிய ஐக்கியத்தின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட ஒருவன் அந்நியோந்நிய ஐக்கியத்தில் நிலைத்திருப்பது அவசியமாகும். அப்போஸ்தலர் 2:42, எபிரேயர் 10:25.

ஐக்கியம் என்பது மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

1. சமுகமளித்தல்
2. தொடர்புகொள்ளல்
3. சந்திப்பு

**2. அமர்வு** - ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அமர்வதும் எம் கிரியைகளிலிருந்து ஓய்வு பெறுதலும்

மாற்றமடைந்த மனிதனைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது விவரமாவது, அவன் உட்கார்ந்திருந்தான் என்பதாகும். அவன் மாற்றப்படுவதற்கு முன்னர் அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது என்று. ஆனால் இப்பொழுது, அவனில் ஒரு தெளிவான மாற்றம் தெரிகிறது. அமர்ந்திருப்பது நமக்கு இரண்டு விடயங்களை வலியுறுத்துகிறது.

1. **அமர்ந்திருத்தல்** - வேதம் வாசித்தலும் ஜெபித்தலும்

லூக்கா 10:39ல் மரியாள் இயேசுவின் பாதத்தில் அமரந்து அவருக்கு செவிகொடுத்துக்கொண்டிருந்தாள் என்று நாம் வாசிக்கிறோம். மேலும் இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருத்தல் என்பது உண்மையான விசுவாசியொருவரின் தெளிவான அடையாளமாகும். அனுதினம் கிரமமாக வேதம் வாசிப்பதும் ஜெபத்தில் நேரம் செலவிடுவதும் ஒரு விசுவாசி தன் வாழ்வில் கொண்டிருக்க வேண்டிய ஓர் ஆவிக்குரிய அப்பியாசமாகும்.

நாம் வேதத்தை வாசிக்கும் போது, எழுதப்பட்டுள்ள வார்த்தைகள் மூலம் தேவன் நம்மோடு பேசுவதோடு அந்த அமர்ந்த மெல்லிய சத்தத்தை நம் செவிகளிலல்ல, நம் இருதயத்தில் கேட்கிறோம். ஜெபத்தில் நேரம் செலவிடும் போது நாம் தேவனோடு பேசுகிறோம். எனவே, எமது தியான வேளையானது நாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு அனுபவிக்கும் இருவழி தொடர்பாடலாகும். நம் தியான வேளைக்காக ஒரு எளிய முறையை நாம் கருதுவோம்:



- வாசிப்பு
  - தினமும் வாசி - சங்கீதம் 1:2
  - விருப்பத்தோடு வாசி - சங்கீதம் 85:8/ 1 சாமுவேல் 3:10
  - தீர்மானத்தோடு வாசி - யாக்கோபு 1:22
- ஜெபம் - யோவான் 16:24
  - தேவனின் காரியங்களுக்காக
  - மற்றவர்களுக்காக
  - உனக்காக

2. **கிரியைகளை விட்டு ஓய்வு** - இரட்சிப்பின் நிச்சயத்தோடு இருத்தல்

அமர்ந்திருப்பதின் இரண்டாவது அர்த்தமாக கிரியைகளை விட்டு ஓய்ந்து இரட்சிப்பின் நிச்சயத்தோடு இருப்பதைக் கருதலாம். ஒவ்வொரு விசுவாசியும்

இரட்சிப்பின் பூரண நிச்சயத்தோடு இருப்பது அதி முக்கியமாகும். அல்லவென்றால் பல்வேறு விதமான பிழையான உபதேசங்களால் ஏமாற்றப்பட்டு இரட்சிப்பை நிறைவேற்ற கிரியைகள் செய்ய வேண்டும் என பிழையான வழியில் நடத்தப்படலாம். ஆதி சபை யுகத்திலும் இப்படிப்பட்ட தவறான உபதேசங்கள் விசுவாசிகளை சத்தியத்தை விட்டு விலகச்செய்தன. அக்காலத்தில் காணப்பட்ட சில தவறான உபதேசங்களாவன:

- இரட்சிப்பு + நியாயப்பிரமாணம்
- இரட்சிப்பு + விருத்தசேதனம்
- இரட்சிப்பு + ஓய்வு நாள்

அக்காலத்தில் காணப்பட்ட தவறான உபதேசங்களாக இவைகள் இருந்தாலும் தற்காலத்தில் காணப்படும் தவறான உபதேசங்களாவன:

- இரட்சிப்பு + பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்
- இரட்சிப்பு + அந்நிய பாஷை பேசுதல்
- இரட்சிப்பு + அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள்

நம் இரட்சிப்பானது நிகரற்றது. அத்துடன் நம் இரட்சிப்பு தேவையான யாவுமே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செய்து முடித்து விட்டார். இதை விசுவாசிப்பதைத் தவிர மனிதன் செய்ய வேண்டியது வேறு எதுவுமல்ல.

ஆகவே நாம் நம்முடைய பாவங்களை உணர்ந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அதை அறிக்கையிட்டு அவரை உள்ளத்தில் வரும்படி அழைத்து அவரை நம் சொந்த ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட அந்த க்ஷணமே நாம் இரட்சிக்கப்பட்டு விட்டோம். இனி அதனோடு வேறு எதுவும் சேர்க்கப்பட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய இரட்சிப்பின் முழு நிச்சயம் கொண்டவர்களாக நமக்காக அதை முழுமையாய் நிறைவேற்றிக்கொடுத்த நம் ஆண்டவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருப்போம்.

- Bro. Dinesh -



# சத்தியமாய் சாத்தியமா?

## சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது போல வாழ்வது தற்கால உலகத்துக்கு பொருந்தாது என்பதே இன்றைய நவீன யுகத்தில் வாழும் நம்மில் பலரது குறிப்பாக இளைஞர்களது எண்ணமும் கருத்துமாகும். எபிரேயர் 11ல் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பெயர்ப்பட்டியல் நமக்கு நினைவுறுத்துவது நாமும் அவர்களைப்போல வாழ வேண்டும் என்பதையே.

கிறிஸ்தவனாய் வாழ்வதில் எத்தனை பாடுகள் இருப்பினும் உண்மையான கிறிஸ்தவனாய் வாழ்வது சத்தியமாய் சாத்தியமா? அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் வில்லியம் கேரி.

## வில்லியம் கேரி

வில்லியம் கேரி இங்கிலாந்து, நார்த்தாம்டன்ஷயரில் 1761 ஆம் ஆண்டு ஆகஸ்டு 17 ஆம் தேதி பிறந்தார். இவர் தந்தை எட்மண்ட் கேரி பல இடங்களுக்கு பயணம் செய்து கொண்டு நெசவுத் தொழிலைச் செய்து வந்தார். வில்லியம் கேரியின் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தபடியால், வாழ்க்கைச்-சற்றுக் கடினமாகத் தான் இருந்தது. சிறுவனாக இருந்தபோதே, வில்லியமுக்கு சுற்றுச்சூழல் மீது அதிக ஆவல் இருந்தது. அவன் செடிகள், பூச்சிகள் மற்றும் சிறு விலங்குகளை சேகரிப்பதில் ஆர்வம் காட்டினான். தான் கண்டிராத தூர தேசங்களுக்குப் பயணம் செய்து, அங்குள்ள மக்களைக் காணவும் அவன் தணியாத ஆவல் கொண்டிருந்தான். அவன் விரும்பும் மற்றொரு பொருள் புத்தகங்கள். அவன் புத்தகங்களில் அநேக முறை அப்படியே ஆழ்ந்துவிடுவான்.

எனினும், பணப் பற்றாக் குறையினிமித்தம் வில்லியம் பள்ளியை விட்டு விலக வேண்டி வந்தது. ஒரு செருப்பு செய்யும் தொழிலாயின் கீழ் வேலையைக் கற்றுக்கொள்ளும்படி சேர்ந்தார். அங்கு ஒரு நண்பன் மூலம் இரட்சிப்பைக் குறித்து அறிந்த கேரி, தன் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். 1781 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் தேதி டாரதியை திருமணம் செய்தார் இளம் கேரி. பாப்டிஸ்டு மிஷனெரி இயக்கத்தின் ஒரு சிறப்புக் கூட்டத்தில் ஒரு மிஷனெரி, இந்தியாவின் தேவைகளைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார். அப்பொழுது வில்லியம் கேரி, அந்தப் பேச்சின் மூலம் சவாலைப் பெற்றவராய், இந்தியாவிற்கு மிஷனெரியாகச் செல்லும்படியாகத் தன்னை அர்ப்பணித்தார். கேரியின் இந்த முடிவு டாரதிக்கு அதிக சந்தோஷத்தைத் தருவதாக இல்லை. அவள் பள்ளிக்குச் சென்றவளோ அல்லது கல்வியறிவு பெற்றவளோ அல்ல. ஆனால் இறுதியில் உடன் வருவதாக ஒப்புக் கொண்டாள்.

வில்லியம் கேரி, குடும்பத்துடன் 1793 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் தேதி கல்கத்தாவில் வந்து இறங்கினார். அவர்கள் தங்கள் வாழ்க்கையை இந்தியாவில் தொடங்கியபோது அநேக துன்பங்களை சந்திக்க நேர்ந்தது. மிகவும் மோசமான ஏழ்மையான வாழ்க்கை நிலை, வித்தியாசமான உணவுப் பழக்கவழக்கங்கள், அதிக வெப்பம், பணப்பற்றாக்குறை, புது வாழ்க்கைச் சூழல், தனிமை மற்றும்


இவற்றின் மத்தியில் நான்கு சிறு பிள்ளைகளையும் பராமரிப்பது என்பது மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் இந்தக் கடினமான சூழ்நிலையில் ராம் பாஷு என்னும் ஒரு பெங்காலிக் கிறிஸ்தவர் இவருக்கு தனது மொழியைக் கற்றுத்தர முன் வந்தது பெரும் ஆசீர்வாதமாக அமைந்தது.

கேரி தன் பொருளாதாரத் தேவைகளை சந்திக்கும்பொருட்டு தாவரவியல் பூங்கா ஒன்றின் மேலாளராகவும், மை தயாரிக்கும் தொழிற்சாலையின் மேலாளராகவும் மற்றும் மொழியியல் துறையின் பேராசிரியராகவும் பணியாற்றினார். ஆனால் பெரும்பாலான நேரத்தை வேதாகமத்தை மொழிபெயர்ப்பதிலேயே செலவிட்டார். இந்த காலக்கட்டத்தில், அநேக திடீர் திருப்பங்களால் ஏற்கனெவே மனமுறிவு அடைந்திருந்த தன் மனைவியையும் தன்னுடைய அருமைப் பிள்ளைகளையும், இழந்தார். இந்த சூழ்நிலையிலும் வில்லியம் கேரி மனமடிவு அடையவே இல்லை. தன் எஜமானரின் அழைப்பைத் தெள்ளத் தெளிவாக அறிந்திருந்தார் அவர்.

இந்த சமயத்தில் ஒரு இளம் மிஷனெரிக்குழு வில்லியம் கேரியுடன் இணைந்து பணிபுரியும்படியாக வந்தது. இது அவருக்கு மிகவும் அதிக மன உற்சாகத்தைத் தந்தது. அவர்கள் ஒரு குழுவாக இணைந்து, வேதாகமத்தைப் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து, அவற்றை அச்சிட்டனர். ஆனால் முற்றிலும் எதிர்பாரத நேரத்தில் அந்த துயரச்சம்பவம் நேர்ந்தது. ஒரு மாலை நேரத்தில், அச்சிடும் பணிக்குப் பொறுப்பாக இருந்த வில்லியம் வார்டு என்பவர் காற்றில் புகையின் வாசம் வருவதாக உணர்ந்தார். அவர் கூச்சலிட்டபோது, அனைவரும் கூடி நெருப்பை அணைக்க முற்பட்டனர். ஆனால், அதற்குள் காரியம் கை மிஞ்சிப்போய் விட்டது. அவர்களுடைய பல ஆண்டு உழைப்பு நெருப்புக்கு இரையானது. அநேகமாக அனைத்துக் கையெழுத்துப் பிரதிகளும் அழிந்துவிட்டன. ஆனால் அவர்கள் ஒரு புதிய உத்வேகத்துடன் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். அவர்கள் ஒரு குழுவாக இணைந்து பணிபுரிந்து வேத புத்தகத்தை அநேக மொழிகளில் மொழிபெயர்த்தனர். இறுதியில் வில்லியம் கேரி 1834 ஆம் ஆண்டு ஜூன் 9 ஆம் தேதி தன் வாழ்க்கை ஓட்டத்தை முடித்தார்.

கேரியின் வாழ்வு ஒரு முழுமையான ஒன்று. அவரது தீராத ஆவல் இந்திய மக்களுக்கு அவர்கள் மொழிகளில் தேவ வார்த்தையை அளிக்க வேண்டும் என்பதே. தேவன் பேரிலும், தொலைந்து போன இந்த உலக மக்களின் பேரிலும் அவருக்கு இருந்த அன்பு அளவிட முடியாததாக இருந்தபடியால், எந்த ஒரு தியாகமும் அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

இதை வாசிக்கும் உன் வாழ்வின் வரலாறு என்னவாயிருக்கப் போகிறது?





தொடரும்........

# கண்டுபிடியுங்கள்

கீழுள்ள கூட்டினுள் 30 வேதாகமப் புத்தகங்களின் பெயர்கள் மறைந்துள்ளன. அவை இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ இருக்கலாம். அவற்றை சரியாக கண்டுபிடித்து வட்டமிடுக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யா | னி | ப | ப் | செ | எ | பி | ர | ச | ங் | கி |
| கி | நி | லே | வி | ய | ரா | க | ம | ம் | ச | த |
| ல் | யா | ரூ | சா | மு | வே | ல் | வே | யோ | சு | வா |
| ம | யா | த் | தி | ரா | க | ம | ம் | அ | எ | பு |
| நீ | தி | மொ | ழி | க | ள் | க | க் | ஜா | ரா | இ |
| ஓ | ப | தி | யா | சி | ஓ | நா | ளா | க | ம | ம் |
| ஆ | தி | யா | க | ம | ம் | ம | க் | ணா | ண் | எ |
| ச | க | ரி | யா | ல் | மீ | க | ஆ | ப | கூ | க் |
| ம் | ள் | யா | சா | ஆ | கா | ய் | தா | னி | யே | ல் |
| ம | யா | மி | ரே | எ | சே | க் | கி | யே | ல் | ப |
| க | சா | கே | எ | ஸ் | த | ர் | ரி | நா | கூ | ம் |
| பா | ஏ | நெ | எ | றா | ச | ங் | கீ | த | ம் | ல |
| உ | ன் | ன | த | ப் | பா | ட் | டு | னா | யோ | பு |

- Bro. Samuel -




# உங்களுக்கு தெரியுமா?







மின்காந்தவியல் விஞ்ஞானத்தின் மூலம் காரணிகளை முன் வைத்து, மின்னுற்பத்தி இயந்திரத்தைக் கண்டுபிடித்த மிகவும் பெயர்பெற்ற பௌதீகவியல் விஞ்ஞானியான **மைக்கல் பெரடே** பரிசுத்த வேதாகமத்தை ஆழமாக விசுவாசித்தவர். அவர் தேவனைப்பற்றியும், ஜெபத்தின் வல்லமையைப் பற்றியும் நம்பிக்கையாயிருந்த ஒருவர்.




சத்திர சிகிச்சை வைத்திய விஞ்ஞானத்தில் நினைவிழக்கச் செய்யும் க்ளோரபோமை கண்டுபிடித்த விஞ்ஞானியான **ஜேம்ஸ் சிம்ஸன்** இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக அறிந்து கொண்டதே தன் வாழ்வில் அதியுயர்ந்த வெற்றியும், கண்டுபிடிப்புமானது என அறிவித்தார். தேவன் ஆதாமுக்கு ஏற்படுத்தின ஆழமான நித்திரைக்கு ஒருவரை இட்டுச்செல்ல முடியுமெனில், அந்நேரத்தில் அவருக்கு சத்திரசிகிச்சை செய்வது இலகுவானது என்ற சிந்தனையின் அடிப்படையில் நடத்திய பரிசோதனைகளின் விளைவாகவே இவர் க்ளோரபோம் என்ற மயக்கமருந்தைக் கண்டு பிடித்தார்.



வெப்பவியல் விஞ்ஞானத்திற்கு அடித்தளம் இட்ட விஞ்ஞானியான **ஜேம்ஸ் ஜூல்** இயேசு கிறிஸ்துவுக்குள் ஆழமான விசுவாசத்துடன் வாழ்ந்தவர்.

---

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..........................................................................................

**முகவரி:** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஒப்பம்:** ..........................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.


மேலதிக விபரங்களுக்கு:

Jeeva Oli

Christian Fellowship Centre

7, Vivekananda Road, Wellawatte,

Colombo 6.

Tel: 2581901

www.christianfellowshipcentre.com